**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

S.C. No. 75/2024

P.W.12 (LW.12)

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமரவேல் பாண்டியன் |
| தந்தை பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Assistant in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 23.09.2025.

(எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்)

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் பென்னாகரம் காவல் நிலையத்தில், காவல் ஆய்வாளராக பணிபுரிந்த வருகிறேன். இதற்கு முன்பு நல்லிபாளையம் காவல் ஆய்வாளராக 2023-ம் ஆண்டு பணிபுரிந்தபோது எருமப்பட்டி காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராகவும் பணியில் இருந்தேன். எருமப்பட்டி காவல் நிலைய குற்ற எண். 224/2023 ச/பி. 294பி, 324, 506(2) இதச வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் பாலமுருகன் முதல் புலன் விசாரணை முடித்து என்னுடைய பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை நான் 18.07.2023-ம் தேதியன்று பெற்று இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை சரிபார்த்தேன். அது சரியாக இருந்ததால், தனியாக நான் ஆவணம் எதுவும் தயார் செய்யவில்லை. இவ்வழக்கின் சாட்சிகள் காயம்பட்ட கணேசன், மணி, ஞானசேகரன் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களை விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் காயம்பட்ட கணேசனுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை உண்மையான உடனடி உயிர் பயத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இருந்ததால் இவ்வழக்கின் சட்ட பிரிவினை மேற்சொன்ன 294பி, 324, 506(2) இதச பிரிவில் இருந்து மாறுதல் செய்து 294பி, 307 இதச-ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ-10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 21.07.2023-ம் தேதி காயம்பட்ட கணேசனுக்கு சிகிச்சை அளித்த நாமக்கல், அரசு

மருத்துவர் பவித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட கணேசன் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்தவர், சொந்த விருப்பத்தின் பேரில் தனியார் மருத்துவமனைக்கு சென்றுவிட்ட காரணத்தினால், காயச்சான்று வழங்கவில்லை என்று கூறினார். மேற்படி கணேசன் கோவை, கங்கா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் தெரிந்து அங்கு சென்று மருத்துவர் திரு. குமணன் அவர்களை விசாரித்து, காயச்சான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி கணேசனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். பின்னர் நான் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பினை நிலையம் வசம் ஒப்புவித்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் 1–வது எதிரி சுப்ரமணியம் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தில் காயம் பெற்றதாக குறிப்பிட்டு 14.06.2023–லிருந்து நான்கு நாட்கள் 18.06.2023–ம் தேதி வரை நாமக்கல், அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சுப்ரமணியத்திற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றேனா என்றால் இல்லை. அ.த.சா.ஆ–10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையில் வாதி கணேசன் எங்களுடைய புலன் விசாரணையில் தோய்வு இருப்பதாக குறிப்பிட்டு மாண்பமை சென்னை, உயர்நீதிமன்றத்தில், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் வாதி புகார் தெரிவித்ததன் பேரிலும், நான் மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய மேல் அதிகாரிகளின் வற்புறுத்தலின் காரணமாக வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கின் சட்ட பிரிவுகளை மாற்றி சட்ட பிரிவு மாறுதல் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

/ஓம்/ A.சண்முகப்பிரியா

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல்.